



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி 11வது, 12வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன்,மாவட்ட ஆட்சியர் சினேகா,மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர்,இ.கருணாநிதி எம். எல்.ஏ,மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர் வே.கருணாநிதிஆகியோர் துவக்கி வைத்தார்கள்.இதில் துணை ஆணையாளர் சசிகலா,இணை ஆணையாளர் சொர்ணலதா , உதவி செயற் பொறியாளர் சத்தியசீலன்,மாமன்ற உறுப்பினர் சத்யா மதியழகன்,வட்ட கழக செயலாளர்கள் சாலா (ஏ) சுகுமாரன்,பி.ஸ்ரீதர்,மதியழகன், சுகாதார ஆய்வாளர் பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் பகுதி கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (06.08.2025) சென்னை கொளத்தூர், ராஜாஜி நகர் மூத்த குடிமக்கள் உறைவிடம் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர் சி. ஹரிப்ரியா, இணை ஆணையர் ஐ.முல்லை, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் சரிதா மகேஷ் குமார், மாநகராட்சி மன்ற உறுப்பினர் நாகராஜன், ஐசிஎப் முரளிதரன், திரு.சந்துரு மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# எங்கள் கலைஞர் வாழ்கிறார்!



கலைஞர் வாழ்கிறார் உதய சூரியனாய் வாழ்கிறார்
எங்கள் தங்கம் வாழ்கிறார் தமிழ்ச் சிங்கமாய் வாழ்கிறார்

பதினொரு லட்சமென பாராட்டைப் பெற்றவரு
பொருளாளர் பதவிக்கே சிறப்புதனைச் சேர்த்தவரு
அண்ணாவால் புகழப்பட்டு தம்பியாக வாழ்ந்தவரு
அறிவுலகம் போற்றப்படும் அறிஞராக இருந்தவரு
வள்ளுவர் கோட்டத்திற்கு வடிவத்தைத் தந்தவரு
வாழ்நாள் முழுவதுமே வள்ளுவராய் வாழ்ந்தவரு
- கலைஞர் வாழ்கிறார்

ஸ்டாலினையே பெற்றெடுத்து தந்தையாக இருப்பவரு
தமிழ்மொழிக்கு செம்மொழியை வாங்கியே தந்தவரு
போராடும் குணத்தினையே பிறவியிலே பெற்றவரு
குளித்தலையில் முதல்வெற்றி முத்திரையைப் பதித்தவரு
திருவாரூர்த் தொகுதியிலே இறுதியாக வென்றவரு
செல்லப்பேரன் உதயநிதிக்குத் துணையாக இருப்பவரு
- கலைஞர் வாழ்கிறார்

இன்மொழியாம் தமிழினையே இனிதாக வளர்த்தவரு
செம்மொழியாம் தமிழுக்கு மாநாடு கண்டவரு
காவேரித் தண்ணீரைப் போராடிப் பெற்றவரு
கடும்உழைப்பால் கழகத்தைக் கண்ணாக வளர்த்தவரு
நானிலத்தில் நல்லாட்சி நாளெல்லாம் தந்தவரு
நாடாளும் தன்மையிலே பூமியிலே சிறந்தவரு
- கலைஞர் வாழ்கிறார்

கழகத்தின் பெருமைதனை உலகிற்கே சொன்னவரு
உதயசூரியன் சின்னத்திற்கு வெற்றிதனைத் தந்தவரு
உலகத்தமிழர் இதயத்திலே உயிராக வாழ்பவரு
போலித்தமிழர் முகத்திரையை முற்றாகக் கிழித்தவரு
கோழைக்குமே வீரமதை பார்வையிலே தந்தவரு
வேட்டிகட்டிய வேங்கையென பாரினிலே வாழ்ந்தவரு
- கலைஞர் வாழ்கிறார்

தளபதியை நாடாள தனக்குபின் ஈன்றவரு
ஸ்டாலினோ மதித்திறனால் திட்டங்கள் கொடுக்குறாரு
திராவிடத்தின் பெருமைதனை தேசத்திற்கு சொல்லுறாரு
கலைஞராக உடன்பிறப்பை காலமெல்லாம் காக்குறாரு
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினாக ஆள்பவரு
தளபதியை தலைவராக தந்திட்ட கலைஞரே
வாழ்கவே வாழ்கவே வாழ்வாங்கு வாழ்கவே!
- கலைஞர் வாழ்கிறார்



**வி.பி.கலைராஜன்,**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

## இரா.லட்சுமணன் தலைமை! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

# ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாள்! 500 நபர்களுக்கு உணவு!

### ஆர்.டி.சேகர் வழங்குகிறார்! கலாநிதிவீராசாமி - கே.வி.லோகேஷ் - எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் பங்கேற்பு!

சென்னை, ஆக. 7-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி 500 நபர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி இன்று (07.08.2025 வியாழக்கிழமை) காலை 11.00 மணியளவில்அப்போலோ மருத்துவமனை டி.எச். ரோடு அருகில் நடைபெறுகிறது.

பகுதிச்செயலாளர் இரா.லட்சுமணன் தலைமை வகிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலை வகிக்கிறார்.

திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி பொதுமக்களுக்கு சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, உணவு வழங்குகிறார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், தொகுதி பொறுப்பாளர் கே.வி.லோகேஷ், ஆர்.வெற்றிவீரன், என்.மருதுகணேஷ்,

என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ் குமார், டி.வி.முத்துகிருஷ்ணன், தா. தமிழ்கொடி, கு.நற்குணம், வெ.சு.சத்யநாராயணன், வி.வி.ரமேஷ், ஒலி ஒளி பாபு, இர.பொன்இளவரசன், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகரா ஜன், ப.குமார், ச. தமிழ்ச்செல்வன், பொ.து. ராஜா, ஜெ.பிரேம்ஆனந்த், எம்.எம்.சாமி, பி.கே. மூர்த்தி, ஆர்.ரமேஷ், கே. மோகன், ஜெ.சுரேஷ்பாபு, பி.அன்பழகன், டி.ஆர். தணிகாசலம், சா. திருப்பதிசாமி, வி.முத்து, மா.ரூபசங்கர், தேவி கதிரேசன் எம்.சி, குமாரி நாகராஜன் எம்.சி, பவித்ராநரேஷ் குமார் எம்.சி, கே. அரிஷ்குமார், ஏ.வெங்கடேஷ், பூங்கோதை,

ராஜ்குமார், மணிகண்டன் மற்றும் அனைத்து மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் அனைத்து பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள் வட்ட கழக நிர்வாகிகள் (பி.எல்.ஏ2) பாக முகவர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

குறிப்பு இந்நிகழ்ச்சிக்கு முன் காலை ஆறு முப்பது மணியளவில் மாவட்ட பொறுப்பாளர் தலைமையில் எம்.சி.ரோட்டில் அமைந்துள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியிலும் பின்பு தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான நடைபெறும் அமைதிப் பேரரணியிலும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு

# சைதை கிழக்கு - 168வது (அ) வட்டத்தில் 1000 பேருக்கு உணவு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்! இரா.துரைராஜ் எம்.சி. - எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. பங்கேற்பு!

சென்னை, ஆக 7-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டின் நினைவு நாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்கு பகுதி 168வது (அ) வட்டத்தில் வட்ட கழக செயலாளரும், வார்டு மாமன்ற உறுப்பினருமான தா. மோகன்குமார் ஏற்பாட்டிலும் சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டல குழு தலைவருமான இரா.துரைராஜ், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டல குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையிலும், 168வது வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன், பகுதி பொருளாளர் ஆர்.அருணகிரி, மாவட்ட பிரதிநிதிகள் ச. சேகர், டி.வி.நரசிம்மன், தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் ஆர். டி.மூர்த்தி, முன்னாள் மாவட்ட பிரதிநிதி இரா. பால்ராஜ், வட்டகழக நிர்வாகிகள் த.பாண்டியன், இ.தனசேகரன், இ.சீனிவாசன், ஜி.என்.நாராயணன், மீனாபரமானந்தம், என். மேகநாதன், ஜி. வெங்கடேசன், டி.மனோகரன், எம்.லிங்கேஷ்வரன், ஏ. என்.காளீஸ்வரன் ஆகியோர் வரவேற்பில் கிண்டி அருளாயம்மன்பேட்டை கலைஞர் நூற்றாண்டு அரசு மருத்துவமனை அருகில் இன்று (07.08.2025 - வியாழக்கிழமை) நண்பகல் 12 மணியளவில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் 1000 பேருக்கு அறுசுவை உணவினை வழங்குகிறார்.

மேலும் இந்நிகழ்வில் கொடிபாலா, எம்.குணா, கோ.தனசேகரன், க.வேல்முருகன், செட்டித்தோட்டம் பி.செல்வம், ஜான்அகஸ்டின், ஜி.சி.ரவிராஜ், பி.ஆகாசம், என். சிலம்பரசன், எஸ்.நாகவேல், ஆர்.ராஜேஷ், எம். ராஜ்கண்ணு, மல்லிகா, ஜெபமாலை, எம்எஸ்எம். ஷேக்தாவூத், எஸ்.பரமானந்தம், எஸ்.தாஸ், எல். எலின்செல்வம், வி.சாமுவேல், ஏ.சரவணன், வஜ்ரவேல், பிரசன்னா, ஆர். மோகன், எம்.தண்டபாணி, எஸ்.பகவதி, டி. இளையராஜா, பி. ராமச்சந்திரன், என்.தங்கராஜ், சி.ரமேஷ், கே.சிவாஜி, ப்ளம்பர்வேலு, வி. லட்சுமணன், பி.சதீஷ்ராஜ் உள்ளிட்ட கழக தோழர்கள், கழக முன்னோடிகள், பாகப் பொருப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள், ஆகியோர் இந்நிகழ்வில் பெருந்திரளாக பங்கேற்கின்றனர்.

## சு.மனோகர் தலைமை! சொ. வேலு முன்னிலையில்

# 78வது வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாள் - உணவு வழங்கல்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகிறார்!

சென்னை ஆக.7-

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி, 78 வது வட்டத்தில் வட்டச் செயலாளர் சு.மனோகர் தலைமையில், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலுமுன்னிலையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதில் மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு பங்கேற்கிறார்.

நம் உயிரினில் கலந்திருக்கும் முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பொது மக்களுக்கு உணவு வழங்குகிறார்.

இடம்: தானா தெருவில் அமைந்துள்ள அண்ணா சிலை அருகில், இன்று பகல் 12 மணி அளவில் வழங்கப்படுகிறது.

ஆகையால், பொதுக் குழு உறுப்பினர்கள் மற்றும் 78வது வட்டக் கழக நிர்வாகிகள், எழும்பூர் வடக்கு பகுதிக்குட்பட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தமிழ் உள்ளவரை தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் புகழ் ஓங்கட்டும்.

## சீ.கிருஷ்ணமூர்த்தி தலைமை! நந்தனம் கி.மதி முன்னிலை!

# 121 'அ' வட்டக் கழகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாள் - உணவு வழங்கல்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, ஆக 7-

நமது நெஞ்சமெல்லாம் வாழும், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் தம்பி, பேரறிஞர் அறிஞர் அண்ணாவின் தம்பி, கழகத்தை 50 ஆண்டுகளுக்கு மேலாக கட்டிக் காத்த, நவீன தமிழகத்தை கட்டியெழுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின், 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 121அ வட்ட திமு கழகத்தின் சார்பில், இன்று ( 07.8.2025 வியாழக்கிழமை) காலை 9 மணி அளவில் லாயிட்ஸ் சாலை 121அ வட்ட கழக அலுவகத்திலும், நடேசன் சாலையிலும் வட்ட செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி மதி எம்.சி., முன்னிலையில், மாவட்ட செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம். எல்.ஏ., பொதுமக்களுக்கு காலை உணவு வழங்குகிறார்.

121 அ வட்ட திமு கழகத்தின் சார்பில், ஏற்பாடு செய்து இருக்கும் இந் நிகழ்ச்சியில், மயிலை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள், 121 அ வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2 / BLC நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

## மயிலை 125வது வட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் - பொது மக்களுக்கு உணவு!

### வட்டச் செயலாளர் அ.தவநேசன் வேண்டுகோள்!

சென்னை, ஆக.7-

மயிலை 125 வது வட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட கழக பகுதி கழக வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்களுக்கு வட்டச் செயலாளர் அ.தவநேசன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

இன்று (7-8-2025 - புதன்கிழமை) நண்பகல் 9 மணியளவில் டாக்டர் அம்பேத்கர் பாலம் பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நாளை முன்னிட்டு அஞ்சலி செலுத்தி மக்களுக்கு உணவு வழங்கும் மாவட்ட கழக செயலாளர்-மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு வழங்குகிறார்.

இதில் மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி, மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி மற்றும் கலந்து கொள்கின்றனர்.

எனவே கழக நிர்வாகிகள் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதலின்படி நேற்று 89–வது வார்டில், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி எம்.சி., அம்பத்தூர் தேர்தல் பொருப்பாளர் சன் முனியாண்டி, தெற்குப் பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி., கிழக்குப் பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ், வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர், கழக நிர்வாகிகள், BLA2, BDA, BYO, BLC பாக நிலை முகவர்கள், வட்ட இளைஞரணி, மகளிர் அணி ஆகியோருடன் கலந்துக் கொண்டு 89–வது வார்டுக்குட்பட்ட பாகத்தில் வீடு வீடாக சென்று உறுப்பினர் சேர்க்கைக்கான நிகழ்வில் பங்கேற்றனர்.




தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி தெருக்களில் சுற்றித்திரியும் தெருநாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி முகாமினை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா துவக்கி வைத்தார் உடன் மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன், தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ. பாலச்சந்தர், துணை மேயர்.கோ. காமராஜ் மற்றும் அலுவலர்கள் உடன் உள்ளனர்.